# பதுளை பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பதுளை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் சபைக்கு பெற்றுக் கொடுத்திருந்த ரூபா 265,000 இற்கான 10 அடி X 10 அடி அளவான பத்து நடமாடும் கடைகளில் பெறுமதி ரூபா 120,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 145,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முதுமால பன்ஸலை பாதையை மண் வெட்டி தயாரிக்கும் வேலைக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 11,750 தொகை தொடர்பாக கடன் கொடுத்தோருக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 11,750 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 19,160 உம் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 32,022 இற்கான பங்களிப்பு தொகைகளை

கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 19,160 இனால் குறைவாகவும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 51,182 இனால் மிகையாகவும் கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 51,182 இனால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் தொடர்பாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,994,391 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,267,807 ஆகும்.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

--------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 137 - 139 | பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக அப் பண்டங்களை பெறுவதற்கு முன்னர் இரண்டு சந்தர்ப்பங்களில் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 79,385 பெறுமதியான 02 காசோலைகள் 2015 ஏப்ரல் 10 திகதி வரை கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள, சேவையை விட்டு சென்றுள்ள மற்றும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்காத ஊழியர்கள் 07 பேரிடம் அறவிடப்பட்ட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 11,876 இனை அறவீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,062,334 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 741,348 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 1,320,986 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

------------------------------------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வீதவரி மற்றும் ஏக்கர்வரி அறவீடு செய்வதில் முன்னேற்றம் நூற்றிற்கு 32.1 உம் மற்றும் நூற்றிற்கு 8.2 இற்கான பலவீன மட்டத்திலேயே காணப்பட்டது.

2.2.2 ஏனைய வருமானங்கள்

------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலை தொடர்பு டவர்கள் தொடர்பாக கட்டணங்கள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் ஆக ரூபா 5,704,344 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

------------------------------------------------

(அ) சபையினால் நடாத்தப்பட்டுவந்த உடுவெல நீர் வழங்கள் திட்டம் தேசிய நீர் வழங்கல்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு உரித்தாக்கப்பட்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு நுகர்வோர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 562,589 இற்கான நிலுவையை தேசிய நீர் வழங்கல்கள் சபைக்கு சாட்டப்பட்டு அப்பணத்தினை அந்த நிறுவனத்தில் இருந்து சபைக்கு அறவீடு செய்யவேண்டும் எனினும், அவ்வாறு அறவீடு செய்யப்படாமல் சபையின் நிலுவை வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தில் பிரிவு 23 ‘‘அ’’ ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திங்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் செயற்பாடுகளில் இருந்து முறையான கணிப்பீடு ஒன்றின் மூலம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு